RNI-N0: TNTAM/2021/83936




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை மலர்-4 இதழ்- 341 டிசம்பர்.11 2025 வியாழக்கிழமை malaithanthi2020@gmail.com 4 பக்கங்கள் விலை ரூ.5

## விஜயை சந்தித்ததால் தி.மு.க., கூட்டணியில் குழப்பம் இல்லை: பிரவீன் சக்கரவர்த்தி



சென்னை, டிச.11-

"த.வெ.க., தலைவர் விஜயை சந்தித்ததில் எந்த தவறும் இல்லை; தி.மு.க., கூட்டணியிலும் குழப்பம் இல்லை," என, காங்கிரஸ் கட்சியின் தரவு பகுப்பாய்வு பிரிவு தலைவர் பிரவீன் சக்கரவர்த்தி விளக்கம் அளித்துள்ளார்.

தி.மு.க.,வுடன் தொகுதி பங்கீடு குறித்து பேச, காங்கிரசில் ஐவர் குழு அமைக்கப்பட்டு உள்ளது. அக்குழுவினரும், சென்னையில் முதல்வர் ஸ்டாலினை சந்தித்து, தொகுதி பங்கீடு குறித்து பேசியுள்ளனர். இந்நிலையில், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பிரவீன் சக்கரவர்த்தி, த.வெ.க., தலைவர் விஜயை சந்தித்து பேசியுள்ளார். அப்போது, காங்கிரஸ் விரும்பும் 135 தொகுதிகள் பட்டியலை கொடுத்து, 75 சீட் கேட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இந்த சந்திப்பு, தி.மு.க., காங்கிரஸ் கூட்டணியில் புகைச்சலை ஏற்படுத்தியுள்ளது. தி.மு.க.,வுடன் குழு அமைத்து தொகுதி பங்கீடு குறித்து பேசத் துவங்கி இருக்கும் நிலையில், தி.மு.க.,வுக்கு எதிரான நிலைப்பாட்டில் இருக்கும் விஜயை பிரவீன் சக்கரவர்த்தி எப்படி சந்திக்கலாம் என, காங்கிரசில் இருக்கும் தி.மு.க., ஆதரவு தலைவர்கள் கொந்தளித்தனர்.

பிரவீன் சக்கரவர்த்தி மீது கட்சி விரோத நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் குரல் எழுப்பி, அதை வலியுறுத்தி கட்சித் தலைமைக்கு கடிதமும் எழுதினர். இதையடுத்து, பிரவீன் சக்கரவர்த்தி நெருக்கடிக்கு ஆளாகி உள்ளதாக கூறப்படுகிறது. இதன் தொடர்ச்சியாக அவர், ஆங்கில இணையதள ஊடகம் ஒன்றுக்கு, அளித்த பேட்டி:எல்லா சந்திப்புகளுக்கும் பின்னணியில், ஒரு அரசியல் திட்டம் இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை.

இட்லி, வடை, தோசை சாப்பிடுவது போன்ற சாதாரண சந்திப்பாகவோ அல்லது திரைப்படங்கள் குறித்து பேசுவதற்கான சந்திப்பாகவோ கூட, விஜயை நான் சந்தித்திருக்கலாம். விஜயை சந்தித்ததில் எந்த தவறும் எனக்குத் தெரியவில்லை. அதேநேரம், த.வெ.க.,வில் இணையும் எண்ணமும் எனக்கு இல்லை. விஜயை சந்தித்ததால், தி.மு.க., கூட்டணியில் எந்தக் குழப்பமும் ஏற்படவில்லை. இவ்வாறு அவர் கூறியுள்ளார்.



■ மதுரை மாவட்டம் கொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றியம் பூதமங்கலம் கிராமத்தில் ஊரக வளர்ச்சித்துறையின் கீழ், பல்வேறு அரசுத்திட்டங்களின் கீழ் கடந்த 2001ம் ஆண்டுக்கு முன் கட்டப்பட்டு தற்போது சீரமைக்க முடியாமல் மிகவும் பழுதடைந்த வீடுகளுக்கு பதில் புதிய வீடுகள் கட்டும்'முதலமைச்சரின் வீடுகள் மறு கட்டுமான திட்டம்' கீழ்,புதிய வீடுகள் கட்டப்பட்டு வருவதை மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் பார்வையிட்டார், ஊரக வளர்ச்சி உதவி செயற்பொறியாளர் அழகேசன் உடனிருந்தார்.

## இரவு நேரத்தில் வாகன சோதனையில் போலீஸ்காரருக்கு நேர்ந்த சோகம்: காலையில் போன் செய்து குற்றவாளி வாக்குமூலம்

சென்னை. டிச.11-

சென்னை மடிப்பாக்கம் பகுதியில் நேற்று நள்ளிரவு 35 வயது கான்ஸ்டபிள் மேகநாதன் மற்றும் அவரது மூன்று சக போலீசார் வாகனத் தணிக்கையில் ஈடுபட்டிருந்தார். அப்போது அந்த வழியாக வேகமாக வந்த ஒரு காரை நிறுத்தி, சோதனையில் ஈடுபட முயன்றனர். காரை ஓட்டி வந்தவர் மது போதையில், கான்ஸ்டபிள் மேகநாதன் மீது மோதிவிட்டு, அவர் காரை நிறுத்தாமல் வேகமாக சென்று விட்டார்.

இதில் மேகநாதன்,35, சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார். இந்த சம்பவம் குறித்தும், கார் டிரைவரையும் போலீசார் தேடி வந்தனர். இந்நிலையில் இன்று காலை தலைமறைவான கார் டிரைவர் சாய்ராம், காவல் துறை கட்டுப்பாட்டு அறைக்கு போன் செய்து, தனது காரில் அடிபட்டு கான்ஸ்டபிள் மேகநாதன் உயிரிழந்ததாக வாக்குமூலம் அளித்து தவறை ஒப்புக்கொண்டார்.

பள்ளிக்கரணை போலீஸ் ஸ்டேஷனுக்கு சென்ற, கார் டிரைவர் சாய்ராம் நடந்த சம்பவத்தை கூறி சரண்டர் ஆகியுள்ளார். இதனைத் தொடர்ந்து கார் விபத்து ஏற்படுத்திய சாய்ராம் (32) என்பவரை கைது செய்து அவர் மீது விபத்து ஏற்படுத்தி விட்டு ஓடுதல் பிரிவின் கீழ் பள்ளிக்கரணை போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரிக்கின்றனர். இரவு நேரத்தில் வாகன சோதனையில் கார் மோதி, கான்ஸ்டபிள் மேகநாதன் உயிரிழந்த சம்பவம் சோகத்தையும், அதிர்ச்சியையும் ஏற்படுத்தி உள்ளது.

## யுனெஸ்கோ கலாசார பட்டியலில் தீபாவளி பண்டிகை

புதுடில்லி. டிச.11-

யுனெஸ்கோ அமைப்பின் கலாச்சார பாரம்பரிய பட்டியலில் தீபாவளி பண்டிகை சேர்க்கப்பட்டுள்ளது.

யுனெஸ்கோ எனப்படும் ஐ.நா., சபையின் கல்வி, அறிவியல், கலாசார அமைப்பு, பாரம்பரிய சின்னத்தின் சரித்திர காலம், கலைபடைப்புத் தன்மை உள்ளிட்ட சிறப்புகளின் அடிப்படையில், சர்வதேச பாரம்பரிய நினைவு சின்னங்களுக்கு அங்கீகாரம் வழங்கி வருகிறது.

அந்த வகையில், யுனெஸ்கோவின் கலாசார பாரம்பரிய பட்டியலில் ஹிந்துக்களின் தீபாவளிப் பண்டிகையும் சேர்க்கப்பட்டுள்ளதாக மத்திய கலாசாரத்துறை அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத் அறிவித்துள்ளார்.

அவரது அறிக்கை; இந்தியாவுக்கு ஒரு வரலாற்று சிறப்புமிக்க நாள், மனித குலத்தின் கலாசார பாரம்பரியப் பட்டியலில் தீபாவளிப் பண்டிகையும் சேர்க்கப்பட்டுள்ளது. பிரதமர் மோடியின் பதவி காலத்தில், இந்தியாவின் கலாசார பாரம்பரியங்களுக்கு, முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு சர்வதேச அங்கீகாரம் கிடைத்து வருகிறது. இந்த புதிய மைல்கல்லும், அதன் பாதையை வலுப்படுத்துகிறது.

தீபாவளியைக் கொண்டாடும் நோக்கமான, நம்பிக்கை, நல்லிணக்கம் மற்றும் சமத்துவம் போன்றவற்றை உலகளவில் எடுத்துச் செல்ல இந்தக் கவுரவம் உதவுகிறது, இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்.

## "எந்த ஷா வந்தாலும்; எத்தனை திட்டம் போட்டாலும்..." ஸ்டாலின் மறைமுக விமர்சனம்!

சென்னை: டிச.11-

"எந்த ஷா வந்தாலென்ன? எத்தனை திட்டம் போட்டாலென்ன? தமிழ்நாடு என்றைக்குமே ஆணவம் பிடித்த டெல்லிக்கு Out of Control தான்!" என்று தமிழக முதல்வர் ஸ்டாலின் கூறியுள்ளார்.



சட்டப்பேரவைத் தேர்தல் நெருங்கி வரும் நிலையில், மத்திய அரசு சார்பில் தமிழ்நாட்டில் வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிர திருத்தப் பணிகள் (எஸ்ஐஆர்) மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்நிலையில், திமுக சார்பில் "என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி" திட்டம் அன்மையில் தொடங்கப்பட்டது.

சென்னை மயிலாப்பூர் தொகுதி வாக்குச்சாவடி கூட்டத்தில் முதல்வர் ஸ்டாலின் கலந்து கொண்டார். ஒரு வாக்க்ச்சாவடியில் 440 வாக்குகளை இலக்காக நிர்ணயித்து ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் உறுப்பினர்களுக்கும், அவரவர்களுக்கான இலக்கையும் ஸ்டாலின் நிர்ணயித்து கொடுத்தார்.

இதையடுத்து திமுக வாக்குச்சாவடி உறுப்பினர்கள் ஒரு மாதம் வீடு வீடாக சென்று பரப்புரை மேற்கொள்ள உள்ளனர். அதேபோல் இந்தக் குழுக்களில் மகளிர் ஒருவராவது கட்டாயம் இருக்க வேண்டும் என்று திமுக தலைமை அறிவுறுத்தியுள்ளது.

இதனிடையே, தமிழக முதல்வர் ஸ்டாலின் தனது சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "எந்த ஷா வந்தாலென்ன? எத்தனை திட்டம் போட்டாலென்ன?

டெல்லி பாதுஷா என்ற நினைப்போடு தமிழ்நாட்டுக்கு வர நினைத்தால், ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் எங்களது கருப்பு சிவப்புப் படை உங்களுக்குத் தக்க பாடம் புகட்டும்!

தமிழ்நாடு என்றைக்குமே ஆணவம் பிடித்த டெல்லிக்கு Out of Control தான்" என்று குறிப்பிட்டுள்ளார்.

## கூட்டணிக்கான கட்சிகளை முடிவு செய்ய இபிஎஸ்க்கு அதிகாரம்; அதிமுக பொதுக்குழுவில் தீர்மானம்

சென்னை. டிச.11-

கூட்டணிக்கான கட்சிகளை முடிவு செய்ய இபிஎஸ்க்கு அதிகாரம் அளித்து உட்பட அதிமுக செயற்குழு, பொதுக்குழு கூட்டத்தில் மொத்தம் 16 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு உள்ளன.



சென்னை வானகரத்தில் உள்ள தனியார் மண்டபத்தில் இன்று காலை பொதுக்குழு, செயற்குழு கூட்டம் தொடங்கியது. கூட்டத்திற்கு, தற்காலிக அவை தலைவர் கே.பி.முனுசாமி தலைமை தாங்கினார். பொதுக்குழு உறுப்பினர் 3 ஆயிரம் பேர், சிறப்பு அழைப்பாளர் உட்பட மொத்தம் 5 ஆயிரம் பங்கேற்று உள்ளனர்.

சட்டசபை தேர்தலுக்கு இன்னும் மூன்று மாதங்களே இருக்கும் நிலையில், அ.தி.மு.க., பா.ஜ., கூட்டணியில் வேறு கட்சிகள் இணையவில்லை. அ.தி.மு.க.,வில் இருந்து பிரிந்து சென்றவர்களை இணைக்குமாறு குரல் கொடுத்த செங்கோட்டையன், கட்சியில் இருந்து நீக்கப்பட்டார். அவரும் விஜய் கட்சியில் இணைந்து விட்டார்.

இந்த பரபரப்பான சூழலில் கூடியுள்ள பொதுக்குழு கூட்டத்தில், அ.தி.மு.க., தலைமையில் மெகா கூட்டணி அமைய, பிரிந்தவர்களை இணைப்பது குறித்து முடிவு எடுக்கப்படுமா என்ற எதிர்பார்ப்பு, அ.தி.மு.க., மட்டுமல்ல, தே.ஜ., கூட்டணி மத்தியிலும் எழுந்துள்ளது. இந்த பொதுக்குழு கூட்டத்தில் 16 முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு உள்ளன.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு:

* தமிழகத்தில் கூட்டணிக்கு அதிமுகவே தலைமை தாங்கும் என்று தீர்மானம் நிறைவேற்றம்.

* வரும் சட்டசபை தேர்தலில் அதிமுக பாஜ கூட்டணி சேர்ந்து போட்டியிட அங்கீகாரம் அளித்து தீர்மானம் நிறைவேற்றம்.

* கோவை, மதுரை மெட்ரோ ரயில் திட்டத்திற்கு அனுமதிக்க வேண்டும் என வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றம்.

* மழை வெள்ளத்தில் இருந்து மக்களை பாதுகாப்பதில் திமுக அரசு தோல்வியடைந்துள்ளது. புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ.30 ஆயிரம் நிவாரணம் வழங்க வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றம்.

* வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணியை வரவேற்று தீர்மானம் நிறைவேற்றம்.

* நெல் கொள்முதல் ஈரப்பத அளவை 22 சதவீதமாக உயர்த்த திமுக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி தீர்மானம்.

* முதலீட்டில் ஆமை வேகம், குறையும் முதலீடுகள், தமிழக மக்களை ஏமாற்றி, போலி புள்ளி விவரங்களை அள்ளி வீசும் முதல்வர் ஸ்டாலினுக்கு கண்டனம் தெரிவித்து தீர்மானம்.

* தமிழகத்தில் கடந்த நான்கரை ஆண்டுகளாக சிறுமிகள், இளம் பெண்கள், வயதான பெண்கள் என அனைத்து தரப்பு பெண்களுக்கும் பாதுகாப்பு இல்லாத சூழல் நிலவுகிறது. காவல்துறையை கையில் வைத்திருக்கும் முதல்வர் ஸ்டாலினுக்கு கண்டனம் தெரிவித்து தீர்மானம்.

* தமிழக மக்களை தொடர்ந்து கடனாளிகளாக்கும் திமுக அரசுக்கு கண்டனம் தெரிவித்து தீர்மானம்.

* பாதுகாப்பற்ற நிலையில் தமிழகத்தை வைத்திருக்கும் நிர்வாகத் திறனற்ற திமுக அரசுக்கும், முதல்வர் ஸ்டாலினுக்கு கண்டனம் தெரிவித்து தீர்மானம்.

* நீட் உளிட்ட திமுக வாக்குறுதிகளை நிறைவேற்றாதற்கு கண்டனம் தெரிவித்து தீர்மானம்.

* மதுரை மேயர் ராஜினாமா செய்யும் அளவிற்கு ஊழல் நடைபெற்றிருப்பதற்கு கண்டம் தெரிவித்து தீர்மானம்.

* பட்டியலினத்தை இழிவு செய்தும், ஒடுக்கப்பட்டவர்களை ஒதுக்கி வைப்பதும் திமுக ஆட்சியில் நடந்து கொண்டிருப்பதற்கு கண்டனம் தெரிவித்து தீர்மானம்.

* உப்பிலிப்பாளையம் முதல் கோல்டுவின்ஸ் வரை தமிழகத்திலேயே மிக நீளமான பாலத்தை, அதிமுக ஆட்சியில் கொண்டு வரப்பட்ட திட்டத்தை ஸ்டிக்கர் ஒட்டி, திமுக அரசு கொண்டு வந்ததாக திறப்பு விழா நடத்தி இருப்பதற்கு கண்டனம் தெரிவித்து தீர்மானம்.

* நீதித்துறை மீதான ஆட்சியாளர்களின் மிரட்டல்களை கைவிடவேண்டும். நீதித்துறையில் அரசின் தலையீடு இருக்கக் கூடாது. நீதித்துறைக்கே சவால்விடும் ஆட்சியாளர்களின் ஆதிக்க மனநிலையை கண்டித்து தீர்மானம்.

* கூட்டணிக்கான கட்சிகளை முடிவு செய்ய இபிஎஸ்க்கு அதிகாரம் அளித்தும், இபிஎஸ்ஐ மீண்டும் முதல்வர் ஆக்க சூளுரைப்போம் என வலியுறுத்தியும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு உள்ளது.

## வாக்கு திருட்டு தேச விரோத செயல் மக்களவையில் ராகுல் காந்தி குற்றச்சாட்டு

புதுடெல்லி, டிச.11-

எஸ்ஐஆர் குறித்து மக்களவையில் நேற்று சிறப்பு விவாதம் தொடங்கியது. அப்போது வாக்கு திருட்டு மிகப்பெரிய தேச விரோத செயல் என்று எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி குற்றம் சாட்டினார். நாடாளுமன்ற மக்களவையில் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தப் பணி (எஸ்ஐஆர்) தொடர்பான விவாதம் நேற்று தொடங்கியது.

காங்கிரஸ் எம்பி மணீஷ் திவாரி விவாதத்தை தொடங்கி வைத்து பேசும்போது, "தலைமைத் தேர்தல் ஆணையரை நியமிக்கும் குழுவில் மாநிலங்களவை எதிர்க்கட்சித் தலைவர், உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதியை சேர்க்க வேண்டும்.

எஸ்ஐஆர் பணியை மேற்கொள்ள சட்டப்பூர்வமாக எந்த அனுமதியும் இல்லை. இதனை உடனடியாக நிறுத்த வேண்டும். மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மீதான சந்தேகங்கள் அதிகரித்து வருகின்றன. எனவே மீண்டும் வாக்குச்சீட்டு முறையில் தேர்தலை நடத்த வேண்டும்'' என்று வலியுறுத்தினார்.

சமாஜ்வாதி தலைவர் அகிலேஷ் யாதவ் பேசும்போது, "காங்கிரஸ் எம்பி மணீஷ் திவாரியின் கருத்துகளை ஆமோதிக்கிறேன். அமெரிக்கா, ஜெர்மனி உள்ளிட்ட நாடுகளில்கூட வாக்குச்சீட்டு முறையில் தேர்தல் நடைபெறுகிறது. இந்தியாவிலும் வாக்குச்சீட்டு முறையில் தேர்தலை நடத்த வேண்டும்'' என்றார்.

பாஜக எம்பி சஞ்சய் ஜெய்ஸ்வால் பேசும்போது, "கடந்த 1947ம் ஆண்டில் முதல்முறையாக வாக்கு திருட்டு நடைபெற்றது. அப்போது ஒட்டுமொத்த காங்கிரஸ் கமிட்டியும் சர்தார் படேலுக்கு ஆதரவாக இருந்தது. ஆனால் நேரு பிரதமராக நியமிக்கப்பட்டார். இதைவிட பெரிய வாக்கு திருட்டு எதுவுமே இருக்காது'' என்றார்.

மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி பேசும்போது, "பிரதமரும், மத்திய உள்துறை அமைச்சரும் இணைந்து தலைமைத் தேர்தல் ஆணையரை தேர்வு செய்கின்றனர். உலகில் வேறு எந்த பிரதமரும் இது போன்று செயல்படுவது கிடையாது. அனைத்து அரசு அமைப்புகளையும் ஆர்எஸ்எஸ் கைப்பற்றி வருகிறது'' என்று குற்றம் சாட்டினார்.

இதையடுத்து, நாடாளுமன்ற விவகாரத் துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு கூறும்போது, "எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, தேர்தல் சீர்திருத்தம் தொடர்பாக மட்டுமே பேச வேண்டும். எந்தவொரு அமைப்பையும் குற்றம் சாட்டக்கூடாது'' என்றார்.

பாஜக எம்பிக்கள் அனைவரும் ராகுல் காந்தியின் கருத்துக்கு ஆட்சேபம் தெரிவித்து கோஷமிட்டனர். இதற்கு நடுவே ராகுல் காந்தி பேசும்போது, ''தலைமைத் தேர்தல் ஆணையரை நியமிக்கும் குழுவில் இருந்து உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதியை நீக்கியது ஏன்? தற்போது தலைமைத் தேர்தல் ஆணையரை நியமிக்கும் குழுவில் பிரதமர், மத்திய உள்துறை அமைச்சர், மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் மட்டுமே உள்ளனர்.

பிரதமரும் மத்திய உள்துறை அமைச்சரும் இணைந்து தலைமைத் தேர்தல் ஆணையரை தேர்வு செய்கின்றனர். மக்களவை எதிர்க்கட்சித் தலைவரின் கருத்துக்கு மதிப்பு கிடையாது. தலைமைத் தேர்தல் ஆணையரை மத்திய அரசு இயக்குவது எந்த வகையில் நியாயம் ஆகும்? தேர்தல் நிறைவடைந்த உடன் 45 நாட்களுக்கு பிறகு சிசிடிவி பதிவுகள் அழிக்கப்படுகிறது.

இதற்கு காரணம் என்ன? எனது கேள்விகளுக்கு மத்திய அரசு பதில் அளிக்க வேண்டும். தேர்தலின்போது வாக்கு திருட்டு நடைபெறுகிறது. இது மிகப்பெரிய தேச விரோத செயல். தேர்தல் ஆணையத்தை சீர்குலைத்து இந்திய ஜனநாயகத்தை பாஜக அரசு கேள்விக்குறியாக்கி வருகிறது. இவ்வாறு ராகுல் பேசினார்.



# மண்ணிவாக்கத்திற்கு சமூக நல்லிணக்க ஊராட்சி விருந்து வழங்கப்பட்டது

மண்ணிவாக்கம், டிச.11-

தமிழகத்தில் சமூக நல்லிணக்கத்தையும் சமூக ஒற்றுமையினையும் கடைப் பிடிக்கும் ஊராட்சிகளை ஊக்குவித்து கௌரவிக்கும் வகையில் தகுதி படைத்த 10 ஊராட்சிகள் தேர்வு செய்யப்பட்டது இதில் செங்கல்பட்டு மாவட்டம் காட்டாங்குளத்தூர் ஒன்றியத்துக்கு உட்பட்ட மண்ணிவாக்கம் ஊராட்சியில் ஒன்று சமூக நல்லிணக்க தினத்தை முன்னிட்டு தாயுமானவர் திட்டம் கல்வி சுயத்தொழில் மற்றும் அரசு நிலங்களை வழங்கும் விழாவில் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சமூக நல்லிணக்க ஊராட்சியாக தேர்வு செய்யப்பட்ட மண்ணிவாக்கம் ஊராட்சியில் தலைவர் எஸ்.. கெஜலட்சுமி சண்முகத்திடம் அதற்கான சான்றிதழ் மற்றும் ஊக்கத்தொகை ரூ1 கோடி வழங்கினார் மாநில அளவில் சமூக நல்லிணக்க இருந்து மண்ணிவாக்கம் ஊராட்சிக்கு வழங்கிட பரிந்துரை செய்த தமிழக சிறு குறு தொழில் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், செங்கல்பட்டு மாவட்ட கலெக்டர் சினேகா, காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம், செங்கல்பட்டு சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன், ஒன்றிய குழு தலைவர் உதயா கருணாகரன் மற்றும் அரசு அதிகாரிகள் ஊராட்சி மன்ற துணைத் தலைவர், ஒன்றிய குழு உறுப்பினர், அனைத்து வார்டு உறுப்பினர்களுக்கு ஊராட்சி மன்ற தலைவர் எஸ்.கெஜலட்சுமி சண்முகம் நன்றி தெரிவித்து உள்ளார்

# தாம்பரம் அருகே தனியார் கட்டுமான நிறுவனத்திற்கு ஆதரவாக செயல்பட்டு 15 மரங்கள் வெட்டப்பட்ட சம்பவத்தை மாவட்ட கழகச் செயலாளர் சிட்லபாக்கம் சார். ராஜேந்திரன் நேரில் சென்று பார்வையிட்டார்

தாம்பரம், டிச.11-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சியின் 41ஆம் வார்டு, சிவசக்தி நகர் பகுதியில் கடந்த 15 ஆண்டுகளாக வளர்ந்திருந்த 15 மரங்கள் தனியார் கட்டுமான நிறுவனத்துக்கு ஆதரவாக செயல்பட்டதால் வெட்டப்பட்டுள்ளதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. திமுக மாநகர மன்ற உறுப்பினரின் கணவரும், பகுதி கழக செயலாளர் தலையீட்டில் மரங்கள் வெட்டப்பட்டதாக உள்ளூர் மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.



இந்த சம்பவம் குறித்து தகவல் அறிந்த மாவட்ட கழகச் செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சிட்லபாக்கம் ச.ராஜேந்திரன் சம்பவ இடத்திற்கு நேரில் சென்று மரங்கள் வேரோடு வெட்டப்பட்டிருப்பதை பார்த்து அதிர்ச்சி தெரிவித்தார். அப்போது அப்பகுதி மக்களிடம் நேரடியாக விவரங்களை கேட்டறிந்தார்.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்த அவர், "தனியார் கட்டுமான நிறுவனத்திற்கு ஆதரவாக இப்பகுதியில் சில திமுகவினர் மரங்களை சட்டவிரோதமாக அகற்றியுள்ளனர். எந்தவிதமான அனுமதியும் இன்றி மரங்கள் வெட்டப்பட்டது மிகப்பெரிய குற்றம். இதுகுறித்து தாம்பரம் மாநகராட்சி ஆணையாளர் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தினார்.

மேலும், இது தொடர்பாக மாவட்ட ஆட்சியரிடம் ஏற்கனவே புகார் மனு அளிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். நல சங்கம் சார்பில் நட்ட மரக்கன்றுகள் பல இடங்களில் திட்டமிட்டு வெட்டப்படுகிறதையும் அவர் கண்டனம் தெரிவித்தார்.

"பெருங்களத்தூர் நலவாழ்வு சங்கம் நட்ட மரக்கன்றுகள் பிடுங்கி எறியப்பட்டதைப் போலவே, தற்போது மாடம்பாக்கம் பகுதியில் மரங்கள் வெட்டப்படுகின்றன," எனவும் கூறினார்



■ புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி அனைத்து மகளிர் காவல் நிலைய போக்சோ வழக்கில் கைது செய்யப்பட்டார் அவரை கடந்த 09/12/25 அன்று புதுக்கோட்டை மாவட்ட சிறைக்கு எடுத்துச் செல்லும்போது மாவட்ட சிறை அருகே தப்பித்து சென்று விட்டார் இவரை பார்க்கும் நபர்கள் உடன் தகவல் தெரிவிக்குமாறு தெரிவித்துக் கொள்கிறோம் தகவல் தெரிவிக்க வேண்டிய தொலைபேசி எண் 9498100764 9498100730




# கோவையில் புதிய பெப்ஸ் கிரேட் ஸ்லீப் ஸ்டோர் திறப்பு

கோவை, டிச.11-

கோவை கணபதி ராமகிருஷ்ணாபுரம் பகுதியில் பெப்ஸ் இண்டஸ்ட்ரீஸ் தனது புதிய பெப்ஸ் கிரேட் ஸ்லீப் ஸ்டோரினை தொடங்கி தனது ரீடெய்ல் வலையமைப்பை மேலும் விரிவு படுத்தியுள்ளது .இந்த ஸ்டோரினை நிறுவனத்தின் துணைத் தலைவர் சி.ழி. ராஜேஷ் திறந்து வைத்தார்.

சுமார் 1100 சதுர அடி பரப்பளவில் அமைந்துள்ள புதிய ஸ்டோர், ஒரு அனுபவ ரீதியான ஸ்லீப் ஸ்டுடியோவாக செயல்படுகிறது. இங்கு ஸ்பிரிங், ஃபோம் மற்றும் காயர் மெத்தைகள், ப்ரீமியம் தலையணைகள், மெத்தை பாதுகாப்பு உறைகள் மற்றும் உறக்க துணைப் பொருட்கள் அனைத்தும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. வாடிக்கையாளர்கள் தயாரிப்புகளை நேரடியாக பரிசோதித்து, பயிற்சி பெற்ற பணியாளர்களிடம் விளக்கங்களைப் பெற்று, தங்களுக்கான சரியான உறக்கத் தீர்வுகளை தேர்வு செய்ய முடியும். இந்த ஆண்டு அறிமுகமான பெப்ஸ் கம்ஃபர்ட், பெப்ஸ் சுப்ரீம், பெப்ஸ் ரெஸ்டோனிக் மெமரி ஃபோம், பெப்ஸ் சுப்ரீயர் ஸ்பிரிங் போன்ற நான்கு மேம்படுத்தப்பட்ட தயாரிப்புத் தொடர்களும் இங்கு கிடைக்கின்றன.

இந்தியாவில் 5,000க்கும் மேற்பட்ட மல்டிபிராண்ட் விற்பனையகங்களும் 91 பிரத்யேக ஸ்டோர்களும் கொண்ட பெப்ஸ், வருங்காலத்தில் மேலும் பல நகரங்களில் தனது 'கிரேட் ஸ்லீப் ஸ்டோர்களை' தொடங்கத் திட்டமிட்டுள்ளது. கோயம்புத்தூரை தலைமையிடமாகக் கொண்ட இந்த நிறுவனம், 'மார்வெலஸ் மிடில் ஸ்பைன் கார்டு', 'ஜீரோ டிஸ்டர்பன்ஸ்' போன்ற காப்புரிமை பெற்ற தொழில்நுட்பங்களையும், இந்தியாவின் முதல் இன்னர்ஸ்பிரிங் மெத்தை எனப்படும் 'ஸ்பைன் கார்டு' தொழில்நுட்பத்தையும் பயன்படுத்தி வருகிறது.

இந்நிகழ்ச்சியில் பெப்ஸ் நிறுவனத்தின் நிர்வாகிகள் ,ஸ்டோர் உரிமையாளர் அவரது குடும்பத்தினர் நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



■ செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி 5வது மண்டல குழு கூட்டம் மண்டல அலுவலகத்தில் நடைபெற்றது இதில் 5வது மண்டல குழு தலைவர் பகுதி கழக செயலாளர் எஸ்.இந்திரன் அவர்கள் தலைமையில் மற்றும் தாம்பரம் மாநகராட்சியின் துணை ஆணையாளர் அவர்களின் முன்னிலையிலும் நடைபெற்றது. இதில் பல்வேறு கோரிக்கைகள் முன் வைத்தனர் இந்த கோரிக்கை அனைத்து நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என மண்டல தலைவர் உறுதி அளித்தார் உடன் மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு அதிகாரிகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



# திருவஞ்சேரி ஊராட்சி அரசினர் மேல்நிலைப் பள்ளியில் 109 பள்ளி மாணவ மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கினார்

தாம்பரம், டிச.11-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் தொகுதிக்குட்பட்ட திருவஞ்சேரி ஊராட்சியில் உள்ள தமிழ்நாடு அரசு உதவி பெறும் திருவஞ்சேரி ஊராட்சி அரசினர் மேல்நிலைப் பள்ளியில் 109 பள்ளி மாணவ மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டியை தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா அவர்கள் வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் ஊராட்சி மன்ற தலைவர் எஸ்.ஜனனி சுரேஷ்பாபு, துணை தலைவர் ருக்குமணிசக்தி, வார்டு உறுப்பினர்கள் எஸ்.. நாகலிங்கம், சூர்யாபொன்வேல், இமானுவேல் என்ற பழனிச்சாமி, அவை தலைவர் சக்தி, ஒன்றிய கிளைக் கழக செயலாளர்கள் பி.வி.ஜே.சுரேஷ்பாபு, மகி மனோகரன், மற்றும் கழக நிர்வாகிகள் பொன்வேல், லோகதாஸ், நிர்வாகிகள் பள்ளி தலைமை ஆசிரியர் ஆசிரியர்கள் மாணவ மாணவிகள் உடன் இருந்தனர்



# பழனியில் தமிழ் புலிகளின் கட்சி இளைஞர்கள் வாகன விபத்தை தடுப்பதற்காக வேகத்தடையில் வெள்ளை நிற வர்ணங்களை பூசினர்

திண்டுக்கல், டிச.11-

திண்டுக்கல் மாவட்டம் பழனி ஜவகர் நகர் தமிழ் புலிகள் கட்சியின் இளைஞர் அணி பிரிவு நிர்வாகிகள் ஜவர் நகர் அருகே உள்ள வேகத்தடையில் இரவு நேரத்தில் அதிவேகமாக வரும் வாகனங்கள் வேகதடையின் மேலே வெள்ளை நிற வர்ணங்கள் பூசப்படாததால் விபத்து ஏற்படுகிறது இதை தடுக்கும் விதமாக வேகத்தடைகளுக்கு வெள்ளை நிற பெயிண்ட் அடித்தனர் மற்றும் இரவு நேரத்திலும், மங்கலான வெளிச்சத்திலும் ஓட்டுநர்கள் வேகத்தடையைக் கண்டறிந்து வேகத்தைக் குறைக்க உதவுகிறது, இது பாதுகாப்பை அதிகரிக்கிறது; வெள்ளை நிறம், எதிரொளிக்கும் தன்மை கொண்டிருப்பதால், வாகனத்தின் முகப்பு விளக்குகளைப் பிரதிபலித்து, வேகத்தடை இருப்பதைக் குறிக்கும் முக்கிய எச்சரிக்கையாகச் செயல்படுகிறது. இது விபத்துகளைத் தடுக்கிறது, மேலும் மஞ்சள், கருப்பு போன்ற பிற வண்ணங்களுடன் இணைந்து பயன்படுத்தப்படும்போது, வேகத்தடைகளின் முக்கியத்துவத்தையும், ஆபத்தையும் தெளிவாக உணர்த்துகிறது. இந்த சமூக சேவைகளை பொதுமக்களும் சமூக ஆர்வலர்களும் இளைஞர்களை பாராட்டி வருகின்றன




# வேலூர், ஸ்ரீபுரம் ஸ்ரீ நாராயணி பள்ளிகளில் ஸ்ரீ சக்தி அம்மாவின் 50ம் ஜெயந்தி விழா, முன்னிட்டு தேசிய அளவிலான கராத்தே போட்டி

வேலூர், டிச.11-

வேலூர் மாவட்டம், வேலூர் அடுத்த திருமலைக்கோடி, ஸ்ரீபுரம் ஸ்ரீ நாராயணி பள்ளியில் ஸ்ரீ சக்தி அம்மாவின் 50ம் ஜெயந்தி விழாவை முன்னிட்டு 07.12.2025 அன்று தேசிய அளவிலான கராத்தே போட்டி காலை 7:00 மணிக்கு தொடங்கி மாலை 6 மணி வரை நடைபெற்றது. இப்போட்டியில் தமிழ்நாடு மட்டுமன்றி ஆந்திரா, கர்நாடகா, புதுச்சேரி உள்ளிட்ட மாநிலங்களில் இருந்தும் சுமார் 3200க்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்றனர் .கராத்தே போட்டியின் நடுவர்களாக லக்ஷமணன், கோபிநாத், பிரபு மற்றும் பல்வேறு மாநிலம் மற்றும் மாவட்டத்தை சேர்ந்த பயிற்சியாளர்கள் பயிற்சியினர் பங்கேற்றனர். இந்நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினர்களாக சண்டை பயிற்சியாளரும் நடிகருமான கராத்தே ராஜா, பிளாக் பெல்ட் 9 டான் ஆகவும் இந்திய அளவில் சிறந்த பயிற்சியாளராகவும் விளங்கிக் கொண்டிருக்கும் ரமேஷ்பாபு அவர்களும் பங்கேற்று வெற்றிப் பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்களையும் பதக்கங்களையும், வெற்றிக் கோப்பைகளையும் வழங்கினர். இப்போட்டியானது ஸ்ரீபுரம் தங்ககோயில் மற்றும் ஸ்ரீ நாராயணி பள்ளிகளின் இயக்குனருமான முனைவர் எம். சுரேஷ்பாபு தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியை ஸ்ரீ நாராயணி பள்ளிகளின் முதல்வர்கள் சுப்பிரமணி மற்றும் இலட்சுமி, பள்ளி நிர்வாக அலுவலர் ஆதிகேசவன் ஆகியோர் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர். இந்நிகழ்வில் பள்ளிகளின், துணை முதல்வர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் அலுவலகப் பணியாளர்கள், ஊழியர்கள், மற்றும் மாணவ மாணவியர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



■ இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்வு செய்யப்பட்ட 18 பணியாளர்களுக்கு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் மூலம் நில அளவை பதிவேடுகள் துறையில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிம்ரன்ஜீத் சிங் காலோன்,இ.ஆ.ப., அவர்கள் பணிநியமன ஆணை வழங்கினார்



மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் தலைமையில்

# கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் விரிவாக்கத்தின் கீழ் அரசு நலத்திட்டங்கள் பயனாளிகளுக்கு வழங்குவதற்கான முன்னேற்பாடு பணிகள் குறித்து ஆய்வுக்கூட்டம்

கடலூர், டிச.11-

கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிபி ஆதித்யா செந்தில்குமார் இ.ஆ.ப., தலைமையில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் விரிவாக்கத்தின் கீழ் அரசு நலத்திட்டங்கள் பயனாளிகளுக்கு வழங்குவதற்கான முன்னேற்பாடு பணிகள் குறித்து ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிபி ஆதித்யா செந்தில்குமார் இ.ஆ.ப., தெரிவிக்கையில்,

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் விரிவாக்கத்தினை சென்னை நேரு உள்விளையாட்டரங்கில் 12.12.2025 அன்று தொடங்கி வைக்க உள்ளார். கடலூர் மாவட்டத்தில் 15.07.2025 முதல் 04.11.2025 வரை உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் கீழ் 378 முகாம்கள் நடத்தப்பட்டது. முகாம்களில் மகளிர் உரிமைத் தொகை வேண்டி விண்ணப்பித்த மனுதாரர்களில் தகுதியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு மகளிர் உரிமைத் தொகை பெறுவதற்கான ஆணை வழங்கப்படவுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலி காட்சியின் வாயிலாக தொடங்கி வைப்பதை தொடர்ந்து, மாண்புமிகு வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் ஆகியோர்களால் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படவுள்ளன. வட்டாட்சியர்கள் பயனாளிகளை தகுந்த முன்னேற்பாடுடன் அழைத்து வரவும், விழா நிறைவு பெற்றவுடன் உரிய முறையில் அவர்களின் இல்லங்களுக்கு மீண்டும் அழைத்து செல்வதை உறுதி செய்திட வேண்டும்.

விழா அரங்கில் பயனாளிகளுக்கு தேவையான அடிப்படை வசதிகளான குடிநீர், கழிப்பறை வசதி, மின்வசதி போன்றவற்றினை கடலூர் மாநகராட்சி அலுவலர்கள் ஏற்பாடு செய்திட வேண்டும். பொதுமக்கள் வரும் இடங்களில் தேவையான அளவு காவல் துறையினர் கண்காணிப்பு பணிகளில் ஈடுபட வேண்டும். பொதுமக்களுக்கு தேவையான மருத்துவ வசதிகளை சுகாதாரத் துறையினர் செய்திட வேண்டும். விழா அரங்கில் மேடைப் பயனாளிகளுக்கு அரசு நலத்திட்டங்கள் வழங்குவதற்கு தேவையான அனைத்து முன்னேற்பாடுகளையும் துறை அலுவலர்கள் ஒருங்கிணைந்து மேற்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிபி ஆதித்யா செந்தில்குமார் இ.ஆ.ப., தெரிவித்தார்.

கூட்டத்தின் போது, மாவட்ட வருவாய் அலுவலர் கோ.புண்ணி கோட்டி, சிதம்பரம் சார் ஆட்சியர் கிஷன்குமார் இ.ஆ.ப., தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) தங்கமணி, மாநகராட்சி ஆணையாளர் முஜிபூர் ரஹ்மான் உட்பட பலர் கலந்து கொண்டனர்.





# விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி, தலைமையில் நடைபெற்றது

சிவகங்கை, டிச.11-

சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம், மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவிக்கையில்,

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், விவசாயிகளுக்கு பயனுள்ள வகையில் எண்ணற்ற திட்டங்களை தமிழகத்தில் செயல்படுத்தி வேளாண் பெருங்குடி மக்களின் நலன் காத்து வருகிறார்கள். அதன்படி, விவசாயிகளின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிடும் பொருட்டும், வேளாண் தொழிலை உழவர்கள் எவ்வித இடையூறு இன்றியும் தேவையான அனைத்து வசதிகளுடன் மேற்கொள்ளும் பொருட்டும், பிரதி மாதந்தோறும் விவசாயிகளுக்கான குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடத்தப்பட்டு வருகிறது.

அதன்படி, கடந்த நவம்பர் மாதத்தில் மாவட்டத்தில் தேர்தல் தொடர்பான வாக்காளர் சிறப்பு தீவிர சுருக்கத் திருத்தப்பணிகள் நடைபெற்றதால், அரசின் பல்வேறு துறையைச் சார்ந்த அலுவலர்கள் அப்பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

எனவே, நவம்பர்2025 மாதத்திற்கான விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டமானது இன்றையதினம் நடத்திட திட்டமிடப்பட்டு, அதனடிப்படையில் இக்கூட்டமானது சிறப்பாக நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில், விவசாயிகளின் பல்வேறு கோரிக்கைகளின் மீது மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும், புதிய கோரிக்கைகள் தொடர்பாகவும் எடுத்துரைக்கப்படுகிறது.

குறிப்பாக, சிவகங்கை மாவட்டத்தில் நீர் நிலையிலுள்ள ஆக்கிரமிப்புக்களை உடனடியாக அகற்றி பயன்பாட்டிற்கு கொண்டு வரவும், கண்மாய் பகுதிகளில் வளர்ந்துள்ள சீமை கருவேல் மரங்களை அகற்றிடவும், கண்மாய்க்கு செல்லும் ஊரணிகளை வெட்டு மராமத்து செய்திடவும், கண்மாய்களை தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளவும், தேவையான நிலங்களில் தடுப்பணைகள் ஏற்படுத்தி நிலத்தடி நீர் மட்டத்தினை பாதுகாத்திடவும், இலவச மின் இணைப்புகள் வழங்கிடவும், கண்மாய் ஆக்கிரமிப்புக்களை அகற்றிடவும், வரத்துக்கால்வாய்களை சீரமைத்திடவும்,

விவசாய பணிகளுக்கென இயந்திரங்கள் வழங்கிடவும், விவசாய நிலங்களை வன விலங்குகள் சேதப்படுத்தாமல் பாதுகாத்திடவும், ஆழ்துளை கிணறுகள் அமைத்திடவும், முதலமைச்சரின் கிராம சாலை மேம்பாட்டு திட்டம் அல்லது நபார்டு திட்டத்தின் கீழ் தார் சாலை வசதி அமைத்திடவும், அரசு மானியத்தில் சோலார் பம்ப்செட் அமைத்திடவும், தேவையான சான்றிதழ்களை வழங்கிடவும், நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறந்திடவும், குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்திடவும் மற்றும் விவசாயிகள் அரசின் திட்டங்களின் பயன்களை முழுமையாக பெற்றிடவும் துறை சார்ந்த அலுவலர்கள் வாயிலாக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

வங்கிகளின் மூலம் கடனுதவிகள் வழங்கி வேளாண் சார்ந்த புதிய தொழில் தொடங்கிட உறுதுணையாக இருந்திடவும், தேவையான உரங்களை இருப்பு வைத்திடவும், மின் விநியோகங்களை சீரான முறையில் வழங்கிடவும், கடனுத விக்குரிய மானியத் தொகையினை தகுதி வாய்ந்த பயனாளிகளுக்கு வழங்கிடவும், விவசாயிகளுக்கான பயிர் காப்பீடு தொகை வழங்கிடவும், விவசாயிகளுக்கான தனி அடையாள எண் வழங்கிடவும், குறிப்பாக இக்கூட்டத்தின் வாயிலாக விவசாயிகள் தெரிவிக்கப்பட்டுள்ள பல்வேறு கோரிக்கைகள் குறித்து அனைத்து துறை அலுவலர்கள் ஒருங்கிணைந்து பணியாற்றி, அரசின் திட்டங்கள் விவசாயிகளுக்கு முழுமையாக சென்றடைவதை உறுதி செய்திட வேண்டும் என மாவட்ட ஆட்சித்த லைவர் திருமதி கா.பொற்கொடி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

மேலும், விவசாயிகளின் பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக, சம்பந்தப்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்து, துறை சார்ந்த அலுவலர்கள் உரிய விபரங்களுடன் விரிவாக எடுத்துரைத்தனர். பரிசீலனையிலுள்ள கோரிக்கைகள் மீது உடனடி தீர்வு காணும் பொருட்டு, உரிய களஆய்வுகளும் மேற்கொண்டு, அந்நடவடிக்கைகள் குறித்த அறிக்கையினை சமர்ப்பிக்கும்படியும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் மரு.எஸ்.செல்வசுரபி அவர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் மரு.ஜி.அரவிந்த் அவர்கள், இணைப் பதிவாளர் (கூட்டுறவு சங்கங்கள்) திரு.இராஜேந்திர பிரசாத், இணை இயக்குநர் (வேளாண்மைத்துறை) திரு.சு.சுந்தரமகாலிங்கம், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திருமதி தனலெட்சமி உட்பட பல்வேறு துறைகளை சார்ந்த முதன்மை அலுவலர்கள், விவசாயிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.




# மாபெரும் கல்விக்கடன் முகாமில் மூன்றாம் கட்டமாக 56 மாணவர்களுக்கு ரூ.2 . 59 கோடி கல்விக் கடனுதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத்சிங் வழங்கினார்

தேனி, டிச.11-

தேனி மாவட்டம், வடபுதுப்பட்டி நாடார் சரஸ்வதி பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் மாவட்ட நிர்வாகம் மற்றும் முன்னோடி வங்கி சார்பாக நடைபெற்ற மாபெரும் கல்விக்கடன் முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங், 56 மாணவர்களுக்கு ரூ. 2 கோடியே 59 இலட்சம் கல்விக் கடனுதவிகளை வழங்கினார்கள்.

தமிழ்நாட்டில் எந்தவொரு மாணவர்களும் உயர்கல்வி கற்காமல் இருக்கக்கூடாது என்ற உயரிய நோக்கத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான தமிழ்நாடு அரசு மாணவர்களின் நலனைக்கருத்தில் கொண்டு புதுமைப்பெண், தமிழ்புதல்வன் போன்ற எண்ணற்ற நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அந்தவகையில், உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு பொருளாதாரம் ஒரு தடையாக இருக்கக் கூடாது என்பதற்காகவும், அனைவரும் கல்வி பயில வேண்டும் என்பதற்காகவும், இதுபோன்ற கல்விக்கடன் முகாம் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது.

இம்முகாமில் மாவட்டத்தில் செயல்படும் அனைத்து வங்கிகளும் பங்கேற்பதால் வங்கிகளில் வழங்கப்படும் கல்விக் கடன் திட்டங்கள், வட்டி சலுகை, திருப்பிச் செலுத்தும் முறைகள் உள்ளிட்டவைகள் குறித்து தெளிவாக மாணவர்களுக்கு எடுத்துரைக்கப்படுகிறது. கல்விக்கடன் முகாம்கள் மூலம் மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதோடு, கல்விக்கடன் குறித்து மாணவர்கள் தங்களுக்கு எழும் சந்தேகங்களை வங்கி அலுவலர்களிடம் கேட்டு தெளிவுபடுத்திக்கொள்ள முடிகிறது.

மூன்றாம் கட்டமாக இன்றைய தினம் நடைபெற்ற கல்விக்கடன் முகாமில் 56 மாணவர்களுக்கு ரூ.2.59 கோடி கல்விக் கடனுதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார். மேலும், இதர மாணவர்களின் கல்விக்கடன் விண்ணப்பங்கள் விரைந்து பரிசிலனை செய்யப்பட்டு கல்விக்கடன் வழங்கப்படும்.

இந்நிகழ்வில், முன்னோடி வங்கி மேலாளர் திரு.கார்த்திகேயன், கனரா வங்கி சுயவேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனத்தின் இயக்குநர் திரு.ரவிக்குமார், முதுநிலை மண்டல மேலாளர் திரு.சந்திரகுமார், முதன்மை மேலாளர் திரு.ராஜேஷ், கல்லூரி தலைவர் திரு. தர்மராஜன், இணை செயலாளர் திரு. சுப்ரமணி, முதல்வர் திரு.மதளை சுந்தரம், மற்றும் அனைத்து வங்கி அலுவலர்கள், மாணவ மாணவியர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



# வேலூர், ஆட்சியரக கூட்ட அரங்கில் மாவட்ட ஆட்சியர் தலைமையில், எருது விடும் விழா குறித்து ஆலோசனை கூட்டம்

வேலூர், டிச.11-

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, சத்துவாச்சாரி, மாவட்ட ஆட்சியரக கூட்ட அரங்கில், 2026ம் ஆண்டு எருது விடும் விழா நடத்துவது தொடர்பாக அனைத்து துறை அலுவலர்கள் மற்றும் விழா குழு ஒருங்கிணைப்பாளர்களுடனான ஆலோசனை கூட்டம், மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மயில்வாகனன், மாவட்ட வருவாய் அலுவலர் சிவசுப்பிரமணியன், வருவாய் கோட்டாட்சியர்கள், வட்டாட்சியர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், விழா குழு ஒருங்கிணைப்பாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# "மனித உரிமைகள் தினம் உறுதிமொழி ஏற்பு"

மதுரை, டிச.11-

மதுரை மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகையில் மனித உரிமைகள் தினம் உறுதிமொழி ஆணையாளர் சித்ரா விஜயன், துணை மேயர் திரு.தி.நாகராஜன் அவர்கள் ஆகியோர் தலைமையில் அனைத்து பணியாளர்களும் ஏற்றுக் கொண்டனர் .

"மனித உரிமைகள் நாள் உறுதிமொழி"

இந்திய அரசியலமைப்புச் சட்டத்திலும், இந்தியாவில் செயல் படுத்தக்தக்க பன்னாட்டு சட்டங்களிலும் வரையறுக்கப்பெற்ற மனித உரிமைகள் குறித்து உண்மையுடனும், பற்று உறுதியுடனும் நடந்து கொள்வேன் என்று நான் உளமார உறுதி மொழிகிறேன். எவ்வித வேறுபாடுமின்றி, அனைவரின் மனித உரிமைகளை மதித்து நடப்பதுடன், மனித உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில், நான் என்னுடைய கடமைகளை ஆற்றுவேன். என்னுடைய எண்ணம், சொல் அல்லது செயல் மூலம், பிறருடைய மனித உரிமைகளை மீறுகிற எந்தவொரு செயலையும், நேரடியாகவோ மறைமுகமாகவோ செய்ய மாட்டேன். மனித உரிமைகள் மேம்படுத்துவதற்கு, நான் எப்போதும் ஆயத்தமாக இருப்பேன் என்று உளமாற உறுதி கூறுகிறேன் என அனைத்து பணியாளர்களும் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.இதே போல் அந்தந்த மண்டலங்களில் உதவி ஆணையாளர்கள் தலைமையில் உறுதிமொழி எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் மக்கள் தொடர்பு அலுவலர் திரு.மகேஸ்வரன், உதவி நகர்நல அலுவலர் மரு.அபிஷேக், கணக்கு அலுவலர் (பொது) திரு.பாலாஜி உட்பட மாநகராட்சி அலுவலர்கள், பணியாளர்கள் கலந்து கொண்டனர்.



■ இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (10.12.2025) மனித உரிமைகள் தினத்தையொட்டி, மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிம்ரன்ஜீத் சிங் காலோன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் அனைத்துத் துறை அலுவலர்களுடன் மனித உரிமைகள் உறுதிமொழி மேற்கொள்ளப்பட்டது





■ புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடி ஒன்றியம் மாங்கோட்டை ஊராட்சியில் சீமை கருவேல மரங்கள் நிலத்தடி நீரை பாதிப்பு ஏற்படக்கூடிய சீமை கருவளையம் மரங்களை அகற்றும் பணி தொடங்கி உள்ளனர் மாவட்ட ஆட்சியர் தலைவர்திருமதி அருணா.ஆ இ.க.ப உத்தரவுபடி விரைந்து சீமை கருவேல மரங்கள்அகற்றும் பணி தொடங்கியுள்ளனர்மாங்கோட்டை ஊராட்சி செயலாளர் முருகையா அவர்கள்



■ மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் மற்றும் மாண்புமிகு மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் திருமதி என்.கயல்விழி செல்வராஜ் அவர்கள் ஆகியோர் திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் வளாகத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் மாற்றுத்திறனாளிகளுக்கு சக்கர நாற்காலியாகவும் மூன்று சக்கர வாகனமாகவும் பயன்படுத்தக் கூடிய இணைக்கும் வசதி கொண்ட மின்கலன் பொருந்திய சக்கர நாற்காலி மற்றும் பேட்டரி ஆப்ரேட் சக்கர நாற்காலிகளை வழங்கினார்கள்.





# வேலூர் ஸ்ரீபுரம் நாராயணி பீடத்தில் சத்தி அமாமா தலைமையில் 'ஐகிரி நந்தினி' பாராயணம்: ஸ்ரீ சக்தி அம்மாவின் 50ம் ஜெயந்தி விழா

வேலூர், டிச.11-

வேலூர் மாவட்டம், வேலூர் ஸ்ரீபுரம் ஸ்ரீ நாராயணி பீடம் குழுமம் ஸ்ரீ நாராயணி பள்ளிகளை சேர்ந்த மாணவ, மாணவிகள் இணைந்து ஸ்ரீ சக்தி அம்மாவிற்கு தெய்வீக இசை அமுதை படைக்கும் விதமாக அருள்மிகு ஸ்ரீ சக்தி அம்மாவின் முன்னிலையில் பிரம்மாண்ட "ஐகிரி நந்தினி" சுலோகம் பாராயணத்தை நிகழ்த்தினர்.

ஸ்ரீபுரம் பொற்கோவில் வளாகத்தில் உள்ள திறந்தவெளி அரங்கில் (ஆம்பிதியேட்டரில்) நடைபெற்ற இந்த விழாவிற்கு, ஸ்ரீபுரம் பொற்கோவில் மற்றும் ஸ்ரீ நாராயணி பள்ளிகளின் அறங்கா வலரும் இயக்கு நருமான சுரேஷ்பாபு முன்னிலையில் நடந்தது. இதில் ஸ்ரீ சக்தி அம்மாவின் நீண்டநாள் பக்தர்கள் வெளிநாட்டுப் பக்தர்களும் கலந்து கொண்டு மாணவர்களின் ஆன்மீகப் பாராயணத்தைக் கண்டு மகிழ்ந்தனர். இவ்விழாவில் 600 மாணவர்கள் ஒரே நேரத்தில் ஒருங்கிணைந்து தேவி துதியை முழு பக்தியுடன் பாடியது காண்போரை நெகிழ்ச்சியில் ஆழ்த்தியது. ஸ்ரீ சக்தி அம்மாவின் பொன் விழாவைப் போற்றும் வகையில், ஒரு உன்னதமான ஆன்மீகக் காணிக்கையாக இந்த பிரமாண்டமான பாராயண நிகழ்வு அமைந்திருந்தது குறிப்பிடத்தக்கது. இதில் திரளான பக்தர்கள் மற்றும் ஸ்ரீபுரம் ஸ்ரீ நாராயணி குழுமம், பள்ளி ஆசிரிய பெருமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# வேலூர், திருமலைக்கோடி, ஸ்ரீபுரம் ஸ்ரீ நாராயணி பீடம், தங்க கோயிலில் கார்த்திகை மாத பௌர்ணமி சிறப்பு யாகம்





■ வேலூர் மாவட்டம், வேலூர் அடுத்த திருமலைக்கோடி, ஸ்ரீபுரம் ஸ்ரீ நாராயணி பீடத்தில், உலக நன்மைக்காகவும் இயற்கை வளங்களை பாதுகாக்க வேண்டியும், ஸ்ரீ நாராயணி ஸ்ரீ சக்தி அம்மா தலைமையில் கார்த்திகை மாத பௌர்ணமி சிறப்பு யாகம் நடைபெற்றது. இதில் உள்ளூர் மற்றும் வெளியூர் பக்தர்கள் திரளாக கலந்து கொண்டனர்.






# கீழக்கோட்டையில் உலக மனித உரிமைகள் தினம் கடைபிடிப்பு

காளையார் கோவில், டிச.11-

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் ஒன்றியத்திலுள்ள கீழக்கோட்டை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் மனித உரிமைகள் தினம் கொண்டாடப்பட்டது. தலைமையாசிரியை தெய்வானை தலைமை வகித்தார். பள்ளி மேலாண்மை குழு துணைத் தலைவி லட்சுமி காராத்தே பயிற்றுநர் ராதா முன்னிலை வகித்தனர். ஆசிரியை கமலம்பாய் வரவேற்புரை ஆற்றினார். ஆங்கில பட்டதாரி ஆசிரியை கீதா மனித உரிமைகள் தின உறுதிமொழி கூற ஆசிரியர்கள் மற்றும் மாணவ மாணவிகள் உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர். அறிவியல் பட்டதாரி ஆசிரியர் ஆரோக்கியசாமி மனித உரிமைகளின் நோக்கங்கள் பற்றியும் மனித உரிமைகளை பாதுகாக்கும் வகையிலும் ஒவ்வொருவருடைய எண்ணம் சொல் செயல் மூலம் பிறருடைய மனித உரிமைகளை மீறுகிற எந்த ஒரு செயலையும் நேரடியாகவோ மறைமுகமாகவோ செய்யக்கூடாது என்றும் மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கு இந்திய குடிமகனாகிய ஒவ்வொருவரும் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியும் இந்தியாவில் செயல்படுத்தக்க பன்னாட்டு சட்டங்களிலும் வரையறுக்கப்பட்ட மனித உரிமைகளை பின்பற்றி நடந்து கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். தலைமை ஆசிரியை தெய்வானை கூறும்போது ஒவ்வொரு மாணவரும் சகோதர உணர்வோடும் பிறருக்கு உதவி செய்யக்கூடிய மனப்பான்மையோடும் ஒருவரை ஒருவர் மதித்து அனைவரும் மகிழ்ச்சி பொங்க வாழ வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். ஆசிரியை வாசுகி நன்றி கூறினார். கணினி பயிற்றுநர் வித்யா ஒருங்கிணைத்தார்.





■ சிவகங்கை மாவட்ட ஆயுதப்படையில் கடந்த (09.12.2025) இராமநாதபுரம் சரக காவல்துறை துணைத்தலைவர் முனைவர் பா.மூர்த்தி. வருடாந்திர ஆய்வு மேற்கொண்டார்கள். ஆய்வின்போது, ஆயுதப்படை காவலர்கள் பயன்படுத்தும் உடை பொருட்கள், உபகரணங்கள் மற்றும் சிவகங்கை மாவட்டத்தின் அனைத்து காவல் வாகனங்களும் பரிசோதிக்கப்பட்டன. பின்னர், காவல் அதிகாரிகள் மற்றும் ஆளுநர்களின் குறைகள் குறித்து கேட்டறிந்து மனுக்களை பெற்றுக்கொண்டார். தொடர்ந்து, ஆயுதப்படையின் ஆயுத வைப்பறை பராமரிப்பு மற்றும் பதிவேடுகளை ஆய்வு செய்து அறிவுரைகள் வழங்கினார்கள். இந்த நிகழ்வில் சிவகங்கை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இரா. சிவ பிரசாத், உடனிருந்தார்கள்.



■ திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற படைவீரர் கொடிநாள் நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் மரு.இரா.சுகுமார் கொடிநாள் வசூலினை தொடங்கி வைத்து, முன்னாள் படைவீரர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.



# வேலூர் பள்ளி மாணவர்கள, ஹாக்கி உலகக் கோப்பை போட்டியை பார்வையிட சென்ற மாணவர்களை டி.ஆர்.ஓ. வாழ்த்து தெரிவித்து, கொடியசைத்து அனுப்பி வைப்பு

சென்னை, டிச.11-

சென்னையில் நடைபெறும் ஹாக்கி ஆடவர் ஜூனியர் உலகக்கோப்பை 2025 இறுதிபோட்டியை பார்வையிட வேலூர் மாவட்டத்திலிருந்து செல்லும் பள்ளி மாணவ, மாணவிகளை மாவட்ட வருவாய் அலுவலர் சிவசுப்பிரமணியன், மாணவர்களுக்கு வாழ்த்து தெரிவித்து கொடியசைத்து அனுப்பி வைத்தனர். இந்நிக ழ்வின்போது மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் பிரேமலதா, மாவட்ட விளையாட்டு அலுவலர் சுப்பிரமணி, மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர் சரஸ்வதி, ஆசிரியப் பெருமக்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள், பணியாளர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.

# சிக்கலான உயிருக்கு ஆபத்தை விளைவிக்கக்கூடிய இரத்த நாளக் கோளாறுக்கு ஹைபிரிட் ரீவாஸ்குலரைசேஷன் முறையில் சிகிச்சை செய்து அப்போலோ மருத்துவமனை சாதனை




மதுரை, டிச.11-

மதுரை அப்போலோ சிறப்பு மருத்துவமனை, நாட்பட்ட குரல் கரகரப்பு காரணமாக அனுமதிக்கப்பட்ட நபருக்கு உயிருக்கு ஆபத்தை விளைவிக்கக்கூடிய இரத்த நாளக் கோளாறுக்கு பைபாஸ் அறுவை சிகிச்சை மற்றும் TEVAR (தோராசிக் எண்டோவாஸ்குலர் அயோர்டிக் ரிப்பேர்) ஆகியவற்றை இணைத்த மேம்பட்ட ஹைபிரிட் ரீவாஸ்குலரைசேஷன் மூலம் வெற்றிகரமாகச் சிகிச்சை அளித்துள்ளது.

புதுக்கோட்டையைச் சேர்ந்த 50 வயது மதிக்கத்தக்க நபருக்கு நாட்பட்ட குரல் கரகரப்பு (hoarseness of voice) இருந்தது. மேலும் அவருக்கு மூச்சுக்குழாய் உள்நோக்கி பரிசோதனையுடன் (bronchoscopy) பயாப்ஸியும் மேற்கொள்ளப்பட்டது ஆனால் அதன் முடிவுகள் நெகடிவ் என வந்ததைத் தொடர்ந்து, சி.டி. கைடட் பயாப்ஸி (CT-guided biopsy) செய்ய அவருக்குப் பரிந்துரைக்கப்பட்டது,

இதனை தொடர்ந்து அவர் மருத்துவ ஆலோசனைக்காக, மூத்த நுரையீரல் சிகிச்சை நிபுணர் டாக்டர்.எம்.பழனியப்பனை அணுகினார், விரிவான மருத்துவ பரிசோதனைகள் மற்றும் சி.டி. ஸ்கேன் (CT Imaging) மூலம், அவரது மார்பு மகாதமனியில் (thoracic aorta) ஒரு இரத்தநாள கோளாறு இருப்பது (சாக்குலர் அனூரிசம் saccular aneurysm) கண்டறியப்பட்டது. குரல் நாண் பக்கவாதம் (vocal cord palsy) ஏற்பட்டுள்ளதுஇது ஒரு அசாதாரணமான உயிருக்கு ஆபத்தை விளைவிக்கக்கூடியதாக இருந்தது.

ஹைபிரிட் ரீவாஸ்குலரைசேஷன் (HYBRID REVASCULARISATION) நடைமுறையைத் நிலைமையின் அவசரத்தை உணர்ந்த இரத்த நாளக் சிகிச்சை நிபுணர் குழுவினர். திட்டமிட்டனர். இதில் இடது கரோடிட் சப்க்ளேவியன் பைபாஸ் அறுவை சிகிச்சை செய்யப்பட்டு, அதைத் தொடர்ந்து தோராசிக் எண்டோவாஸ்குலர் அயோர்டிக் ரிப்பேர் பிறகும் சப்க்ளேவியன் தமனிக்கு இரக்கு ஓட்டம் கிடைப்பகை உறுதி செய்தது. பைபாஸ் (TEVAR) செய்யப்பட்டது. இந்த செயல்முறையின் மூலம் ஸ்டென்ட் கிராஃப்ட் பொருத்தப்பட்ட அறுவை சிகிச்சைக்கு பிறகு, நோயாளி நிலைப்படுத்தப்பட்டு, குழாய் பொருத்தப்பட்டு துல்லியமான ஸ்டென்ட் கிராஃப்ட்டை பொருத்துவதற்காக கேத் லேப்ற்கு (Cath Lab) மாற்றப்பட்டார்.

இரத்தக்கசிவு (endovascular leak எண்டோவாஸ்குலர்லீக் இல்லை என்பது உறுதி ஒரு மாத கால தொடர் சி.டி. ஸ்கேனில் அனூரிசம் முழுமையாக உறைந்து (thrombosis) செய்யப்பட்டது. இது சிகிச்சையின் வெற்றியை உறுதிப்படுத்தியது. இரத்த நாளக் கோளாறு முற்றிலும் நீக்கப்பட்டப்பிறகு நோயாளி முழுமையாக குணமடைந்தார்.

மூத்த நுரையீரல் சிகிச்சை நிபுணர் டாக்டர் எம்.பழனியப்பன் இதுகுறித்து கூறியதாவது. மக்களிடையே குரல் கரகரப்பு பெரும்பாலும் அலட்சியப்படுத் தப்படுகிறது. ஆனால் குறிப்பாக இந்த நபரிடம் இது ஒரு தீரமான மார்பு மகாதமனி அனுசரிசத்தை வெளிப்படுத்தும் முக்கியக் குறிப்பாக இருந்தது. துல்லியமான மருத்துவ பரிசோதனையும், சிகிச்சையும் அதனை தெளிவாக சரியான நேரத்தில் மேற்கொள்ளப்பட் எடுத்துக்காட்டியது. இரத்த நாளம்

மற்றும் எண்டோலாகுர் அறிவை சிகிச்சை நிபுணர் டாக்டர். வெங்கட பிரசன்னா கூறியதாவது பொதுவாக சாக்குலர் அனூரிசங்கள் அதிக கவனம் தேவைப்படுபவை ஹைபிரிட் ரீவாஸ்குலரைசேஷன் சிகிச்சையின் போது, TEVAR மூலம் அனூரிசத்தை பாதுகாப்பாக விலக்கி வைக்கும் அதே வேளையில், சப்க்ளேவியன் தமனியைப் பாதுகாக்கவும் எங்களுக்கு உதவியது. இந்த ஒருங்கிணைந்த சிகிச்சை அணுகுமுறை நோயாளிக்கு சிறந்த சிச்சை பலனை அளித்தது."

மருத்துவ சேவைகளின் இணை இயக்குனர் டாக்டர். கே. பிரவீன் ராஜன் "அப்போலோ சிறப்பு மருத்துவமனைகளில், மருத்துவ சிறப்பின் எல்லைகளை விரிவுபடுத்தும் எங்கள் அர்ப்பணிப்பு அசைக்க முடியாதது இது போன்ற சிகிச்சையில் அறுவை சிகிச்சை நிபுணத்துவத்துடன் அதிநவீன தொழில்நுட்பத்தை ஒருங்கிணைப்பதன் மூலம் சிறந்த மருத்துவ சிகிச்சையை வழங்க முடியும் இந்த வெற்றியின் மூலம் சிக்கலான இரத்த நாள் சிகிச்சைகளுக்கு புதுமையான, உயிர்காக்கும் சிச்சைகளை வழங்குவதில் மதுரை அப்போலோ மருத்துவமனை சிறந்து விளங்குவதில் பெருமை அளிக்கிறது." என்று கூறினார்.

அப்போலோ மருத்துவமனைகளின் தலைமை இயக்க அதிகாரி டாக்டர். நிகில் திவாரி கூறியதாவது "இந்த முன்னோடி அறுவை சிச்சைகள் உலகத் தரம் வாய்ந்த அதிநவீன மருத்துவ சிகிச்சை வழங்கும் எங்கள் அடிக்கோடிட்டுக் காட்டுகின்றன. எங்கள் மருத்துவர்களின் கைதேர்ந்த நிபுணத்துவத்தை சமீபத்திய தொழில்நுட்பத்துடன் இணைப்பதன் மூலம், அறுவை சிகிச்சை சிறப்பில் இது போன்ற சாத்தியக்கூறுகளை நாங்கள் தொடர்ந்து மறுவரையறை செய்யறோம். அப்போலோ சிறப்பு மருத்துவமனை, மதுரை, அதிநவீன மருத்துவ முன்னேற்றங்களுக்கு முன்னோடியாகவும், நோயாளிக்கு மிக உயர்ந்த தரமான மருத்துவ பராமரிப்பை உறுதி செய்வதற்கும் கடமைப்பட்டுள்ளது."

இந்த செய்தியாளர் சந்திப்பில் அப்போலோ மருத்துவமனை, மதுரை மண்டலத்தின் தலைமை செயல் அதிகாரி டாக்டர். நிகில் திவாரி, மருத்துவ சேவைகளின் இணை இயக்குனர் டாக்டர்.கே. பிரவின் ராஜன், முத்த நுரையீரல் நோய் நிபுணர் டாக்டர். எ பழனியப்பன், இரத்த நாள அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர்.கே.எஸ்.வெங்கட பிரசன்னா ஆகியோர் கலந்து கொண்டனர்.



# சிவகங்கை தெற்கு ஒன்றிய திமுக.. என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி

## ஒசெ. ம. ஜெயராமன், துசெ. பஞ்சவர்ணம், இளைஞரணி தங்கம் பங்கேற்பு

சிவகங்கை, டிச.11-

சிவகங்கை மாவட்டம் தமிழ்நாடு முதலமைச்சர் ஸ்டாலின் ஆணைக்கிணங்க சமீபத்தில் நடந்தேறிய என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி எனும் சிறந்த முன்னெடுப்பினை கிளைக்கழகங்கள் மற்றும் கிராமங்களுக்கு கொண்டு செல்லும் பிரச்சார உக்தியாக தமிழ்நாட்டு அரசியல் கட்சிகளில் முதன்முதலில் முன்னெடுத்துள்ளது...

அதனடிப்படையில் சிவகங்கை தெற்கு ஒன்றிய திமுக செயலாளர் டாக்டர் ம.ஜெயராமன் தலைமையில் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது...

ஒன்றிய துணைச் செயலாளர் கொட்டகுடி பஞ்சவர்ணம் முன்னிலையில் நடைபெற்ற இந்த ஆலோசனக்கூட்டத்தில் ஒன்றிய செயலாளர் ஜெயராமன் தலைமைக்கழக ஆணையின்படியும், மாவட்டக்கழக செயலாளர், அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் ஆலோசனையின் பேரிலும் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி கூட்டங்களை நடத்துவது பற்றிய ஆலோசனைகளை வழங்கினார்...

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் மாவட்ட ஆதிதிராவிடர் அணி சிங்கமுத்து, மாவட்ட தொழிலாளரணி புதுப்பட்டி அர்ச்சுனன் , மாவட்ட மகளிரணி மார்கரேட் கமலா பத்தினாதன் , மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி இராஜேஷ்வரி அண்ணாதுரை , ஒன்றிய இளைஞரணி வணடவாசி தங்கம் , ஒன்றியக்கழக நிர்வாகிகள் மாரிக்கண்ணன் , பொன்னம்பலம், தங்கச்சாமி , கண்ணாரிருப்பு இளையராஜா , கல்குளம் பாலு, விஏஓ. சேது , ஐடி விங் கொட்டகுடி தேவேந்திரன் , சவரி, ஒன்றிய மேனாள் கவுன்சிலர்கள் மாத்தூர் ரமேஷ் , கோவானூர் வேல்முருகன் , வேம்பன்குடி ஆனந்தராஜ் , இளைஞரணி கீழக்குளம் அழகுசுந்தரம் , செல்லப்பாண்டி , புதுப்பட்டி முத்துக்குமார், முலைக்குளம் அய்யனார் , கோமாளிபட்டி அழகர், கொட்டகுடி சம்பத் , படமாத்தூர் மேலமைப்பு பிரதிநிதி இராமச்சந்திரன் ,சக்கந்தி அப்பாஸ் உள்ளிட்ட தெற்கு ஒன்றிய, கிளைக்கழக நிர்வாகிகள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்..

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161